REGD. No. M. 424(

வரவேற்புக் குழுவினர், சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

மாநில மாநாட்டுப் பந்தல் அமைப்பு வேலை துவங்கிவிட்டனர்

மாநில மாநாட்டுக்காகப் பந்தல் அமைப்பு வேலை துவக்கமாகிவிட்டது.

வண்டி வண்டியாகச் சாமான்கள் வந்தவண்ணம் உள்ளன.

S. I. A. A. திடலில், பந்தல் அமைப்புக் குழுத் தோழர்கள் சி. வி. ராசன், ஏ. கே. சாமி, ஆர். டி. அரசு, கிருஷ்ணன் ஆகியோர் மேற்படி பந்தல் அமைப்பு வேலையைக் கவனித்து வருகின்றனர்.

வரவேற்புத் தலைவர் தோழர் **என். வி. நடராசன்**, வரவேற்புச் செயலாளர் **மணிமொழியாருடன்**, மாநில மாநாட்டுக் காரியங்களை கவனித்து வருகிறார்.

மாநாட்டுச் செயலாளர்களில் ஒருவரான தோழர் **மனோகரன்**, தமது சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு டிசம்பர் 3ந் தேதி சென்னை வருகிறார்.

திராவிடநாடு

மலர் 10 | 2—12—51 | இதழ் 23

இலங்கை 15 சதம்] விலை அணா இரண்டு [மலாய் 12 காசு

டிசம்பர் முதல் கிழமை, தீர்மான ஆய்வுக்குழுவினர் கூடி, தீர்மானங்களைக் குறித்து முடிவுகள் செய்ய இருக்கின்றனர்.

மாநாட்டுக்குத் தீர்மானங்கள் அனுப்ப விரும்புவோர், உடனே, தீர்மான ஆய்வுக்குழு, மாநாடு அலுவலகம், 24, சூரியநாராயண செட்டி தெரு, ராயபுரம் என்ற முகவரிக்குத் தீர்மானங்களை அனுப்பி வைக்கும்படி வரவேற்புத் தலைவர் அறிவிக்கிறார்.

கலைக்குழுவினர்கள், தோழர்கள் மு. கருணாநிதியும், டி. எம். பார்த்தசாரதியும், நாடகங்கள், இசைநிகழ்ச்சிகள் ஆகியவற்றுக்கான ஏற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். பல்வேறு நாடகக் குழுவினர், இந்தக் கலைப்பணியில் பங்கு செலுத்த மகிழ்ச்சியுடன் முன்வந்துள்ளனர் எனத் தெரிகிறது.

தோழர் மு. கருணாநிதி, எழுதி நடிக்கும் இளைஞன்குரல் என்ற நாடகம் உண்டு. இதிலே, குணசித்திர நடிகர் தோழர் எம். ஜி. சக்கரபாணி பங்கு கொள்கிறார் என்று தெரிகிறது. அதற்கான ஆரம்ப வேலைகளைக் கலைக் குழுவினர் கவனித்து வருகின்றனர்.

சிறந்த எழுத்தாளரான தோழர் செழியன் (தோழர் நெடுஞ்செழியன் அவர்களின் இளவல்) தீட்டிய "ஜெமீன் மாளிகை" எனும் புதிய நாடகம், சுவையும் பயனும் தரும் விதமாக அமைந்திருக்கிறது. நமது தோழர் கே. ஆர். ராமசாமி தமது குழுவினருடன், 'ஜெமீன் மாளிகை'யை மாநாட்டிலே நடத்தஇருக்கிறார். மற்றும் பத்தாண்டுகளுக்கு முன்பு, தமிழகத்திலே பல இடங்களில் நடைபெற்ற "சந்திரோதயம்" (C. N. A. தீட்டியது) என்ற நாடகத்தையும் தோழர் கே. ஆர். ராமசாமி நடத்த இசைந்திருக்கிறார். சீர்திருத்தக் கருத்துக்கள் நிரம்பிய இரு நாடகங்களும், சிறப்பான கலை விருந்தாக அமையப் போகின்றன.

தமிழகத்திலே சீர்திருத்தம் மலர்ந்து மணம் பரப்பி வருகிறது—ஆந்திரத்தில் எப்படி என்று பலர் ஐயுறுகின்றனர். அந்த ஐயத்தைப் போக்க, குலமுலேனிபில்லா என்ற தெலுங்கு நாடகம் பெரிதும் பயன்படும். நெல்லூருக்கருகே உள்ள மாதர்பாக்கம் எனும் ஊரிலுள்ள ஆந்திர நண்பர்கள் இதிலே நடிக்கிறார்கள்.

பெயரே எடுத்துக் காட்டும் நாடகக் கருத்தை—குலமுலேனிபில்லா—ஜாதியில்லாத பெண்! ஒரு வைதீகப் பார்ப்பனக் குடும்பத்திலே முளைத்த சீர்திருத்தத்தைச் சித்தரிக்கும் நாடகம் இது.

ஆடவர்களே, இயக்கக் கருத்துகளைப் பரப்புவதற்காகப் 'பவுடர்' தடவியது, இயக்க வரலாற்றிலே பரபரப்பை உண்டாக்கிற்று." இது என்ன பிரமாதம்? என்று கேட்கிறது, "போராட்டம்" "போராட்டம்"—நமது இயக்கத் தோழியர்களை தீட்டி நடாத்தும், தமிழ்நாடகம். திராவிடப் பெண்கள் முன்னேற்றக் கழகத்தை நடத்திவரும், தோழியர் அலமேலு அப்பாதுரை அவர்களின் அரிய முயற்சி இந்த ஏற்பாடு! ஆலை முதலாளியாகத் தோன்றி ஆர்ப்பாட்டமாக நடிக்கப் போகிறார் தோழியர் அலமேலு அப்பாதுரை!! மற்றும் தோழியர்கள் பூங்கோதை, அருண்மொழி ஆகியவர்கள் இதிலே நடிக்கிறார்கள். முழு விவரம் அடுத்த இதழில். நாடகத்திலே, எல்லா பாகங்களும், தோழியர்களே! முதல் முயற்சி! ஆடவர் உலகுக்கு ஓர் அறைகூவல்—"போராட்டம்"

மாநில மாநாட்டிலே, இசை விருந்து அளிக்க பலர் அழைக்கப்பட்டு — இசைவு தந்துள்ளனர் எனத் தெரிகிறது. தேசிகரின் தேனிசையும், சிதம்பரம் ஜெயராமனின் இன்னிசையும், T. V. நமசிவாயத்தின் நல்லிசையும், தோழியர் கஸ்தூரியின் இன்னிசையும், தோழர் செல்லமுத்துவின் இன்னிசையும், தோழர் அனீபாவின் இன்னிசை முழக்கமும்—உண்டு என்று, கலைக் குழுவினர் கூறி, பெரிய பட்டியலையே தருகிறார்கள்! ஏற்பாடுகள் பூர்த்தியானதும் விவரம் அறிவிக்கப்படும். தெலுங்கு மட்டும்தானா! ஏன் மலையாள நாடகம் இல்லை? கன்னட நாடகம் உண்டா? என்று கலைக் குழுவினரைப் பலர் கேட்டிருக்கிறார்களாம். இதற்கு பதில் தர, கலைக்குழு முயற்சிக்கும் என்று நம்புகிறோம். ஓரங்க நாடகங்களாவது, மலையாள, கன்னட மொழிகளிலே நடைபெற ஏற்பாடு செய்யப்படக் கூடும். பந்தல் அமைப்புக்கு உறுப்பினர்களான தோழர் A. K. சாமி, R. T. அரசு ஆகிய இருவரும் ஓவிய நிபுணர்களாக இருப்பது மாநாட்டு அலங்கார அமைப்புகள் வசீகரமாக இருக்குமென்பதை உறுதிப்படுத்துவதாக இருக்கிறது.

பிரபல ஓவிய நிபுணர்களான பாலு பிரதர்ஸ், ஆர்ட்டிஸ்ட் மாதவன், G. H. ராவ் போன்றவர்களும், அலங்கார வளைவுகள் நுழைவு வாயில்கள் ஆகியவற்றை அமைக்க இசைந்துள்ளனர்.

ஊர்வலம் நடாத்த அதிகாரிகளிடம் அனுமதி கேட்கப்பட்டிருக்கிறது. கிடைக்கலாம் என்று நம்பிக்கை கிடைத்திருக்கிறது.

எல்லா வகையிலும், மாநில மாநாடு மிகமிக விமரிசையாக இருக்குமென்று தெரிகிறது. வெற்றி, மாநாட்டுக்குப் பலப்பல ஆயிரக் கணக்கிலே கூடும் திராவிடத் தோழர்களின் ஒத்துழைப்பைப் பொறுத்திருக்கிறது.

பகல் இரவு என்று பாராமல், வரவேற்புக் குழுவினர் பணியாற்றித் தீரவேண்டும் — மாநாடு சீரும் சிறப்புமுள்ள வகையில் நடைபெற நாட்கள் அதிகமில்லை.

சென்னையில் உள்ள தி. மு. கழகத் தோழர்கள் அனைவரும், இன்று முதலே பணிபுரிய முன்வரவேண்டும் — என்று வரவேற்புத்தலைவர் வேண்டுகிறார்.

தி. மு. க—கிளைக்கழகக் கொடிகள் பல இடங்களிலிருந்து வந்துள்ளன.

எல்லா கிளைக் கழகங்களும், கொடிகளை அனுப்பிவிட வேண்டப்படுகிறது—உடனடியாக.

மாநாட்டுப் பந்தல் நுழைவிட[...] தருகிலேயே, தி. மு. க—வுக்கு[...] தழைத்துள்ள கிளைகளின் எ[...] ணிக்கை எழிலுறத் தெரிய வே[...] டாமா! தத்தமது ஊர்ப்பெய[...] பொறித்த கொடிகள் கெம்பீரமா[...] அசைந்தாடுவதைக் காணும்போது உண்டாகும் களிப்புக்கு ஈடா[...] எதைக் கூறலாம்! பெற்ற குழந்தை யின் குறுநடை கண்டு மகிழு[...] தாய் பெறும் பெருமைக்கு ஈடான[...] தல்லவா!! இதுவரை அனுப்பா[...] கிளைக்கழகங்கள் கொடியை அனுப்பிவைக்கவும் — உடனே 13, 14, 15, 16,—நான்கு நாட்கள் தி. மு. க. வின் அறிவு விருந்து அருமையாக இருக்குமெனத் தெரி கிறது.

★

மக்கள் கீதம்

பட்டினி போட்டனர்
பஞ்சம் வளர்த்தனர்
*
கள்ள மார்க்கட்டைக்
கொழுக்கவைத்தனர்
*
கொள்ளை இலாபக்காரருடன்
குலவிக் கொஞ்சினர்
*
தொழிலாளியை வாட்டினர்
விவசாயியை வதைத்தனர்
*
வரிமேல் வரி போட்டனர்
பொதுமக்களை விரட்டினர்
*
தடியால் அடித்தனர்
சிறையில் தள்ளினர்
*
துப்பாக்கியால் சுட்டனர்
*
இவ்வளவு கொடுமை செய்த
காங்கிரசார் ஓட்டும் கேட்கிறார்கள்.
*
அக்கிரமக்காரரை ஆளவிடோம்!
பாசீசத்தை வளரவிடோம்!

காங்கிரசுக்கு
ஓட் அளிக்கமாட்டோம்!

இந்த முழக்கம் கிளம்பவேண்டும்.
பட்டி தொட்டிகளிலும்
கேட்கவேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழக
மாநில மாநாடு
இதற்கான அணிவகுப்பு!

வாரீர் பலப்பல ஆயிரக்கணக்கில்

பணமூட்டை கொண்டு ஓட்டு வேட்டையில் ஈடுபடும் காங்கிரசார் உணரட்டும் நாடு கொண்டுள்ள உறுதியை!

சென்னை வாரீர்! செருக்குற்ற காங்கிரசாட்சியை ஒழித்தே தீருவோம் என்று சூளுரைத்திட வாரீர்!!

நாடு விழித்துக்கொண்டதை நாசகாலர்கள் அறிந்துகொள்ளட்டும்.

மக்களின் தீர்ப்பு என்ன என்பதை மமதையாளர் உணரட்டும்.

மாசேதுங் பிறந்திருக்கிறான் என்பதை இந்திய ச்யாங்கேஷேக் அறியட்டும்.

மாநில மாநாடு மகத்தான முறையிலே நடைபெற உதவுங்கள்.

மக்களை மண்ணென மதித்த காங்கிரசாட்சியை ஒழிக்கும் வீரர் கூட்டத்தின் அளவை எடுத்துக் காட்டுங்கள்!

ஆளவந்தார்கள்—மக்களை மாளச் செய்தார்கள்!

அணிவகுப்பைக் காட்டுங்கள்— அக்கிரமத்தை விரட்டுங்கள்!

மாட்டுப் பெட்டியில்
ஓட்டுப் போடமாட்டோம்

மக்கள் கீதமாகட்டும்
இந்த முழக்கம்.

மாநில மாநாட்டில்
மக்கள் கீதம் கிளம்பட்டும்.
*
மாட்டுப் பெட்டிக்காரர்கள்
மண்ணைக் கவ்வட்டும்.
*
மக்களாட்சி அமைக்க
மாநில மாநாடு வழி காட்டும்!
*
பரணி பாடுவீர்!
தரணி ஆளுவீர்!

★ வாழ்க வசவாளர்கள்!

கபடன்
காமுகன்
கலகம் விளைவிப்போன்
கட்டுக்கடங்காதவன்
கள்ளச் சிந்தையன்
காசாசைக்காரன்
காட்டிக் கொடுப்போன்
சதிகாரன்
பதவிப் பித்தன்
சுரண்டிப் பிழைப்போன்
சுயநலக்காரன்
குருத் துரோகி
கூடிக் கெடுப்போன்
பயங்கொள்ளி
எத்தன்

இவைகளைவிடக் கடுமையும் கொடுமையும் நெளியும் 'வசவுகள்' இருக்கமுடியாது-எவ்வளவு நீண்டகால விரோதியாக இருந்தாலும் இதைவிட இழிவாகக் கண்டிக்க முடியாது.

இவ்வளவும் இதற்கு மேலும் தான், தி. மு. கழகம் துவக்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டவுடன் கழகம் அமைத்தாக வேண்டும் என்ற ஆர்வம் கொழுந்துவிட்டெரியும் உள்ளம் கொண்ட உறுதியாளர்களான இளைஞர்களும், பணிபுரிந்து நரைத்த முதியவர்களும், இலட்சியத்தைக் காத்திடத் தயங்கோம் என்று முழக்கமிட்டவர்கள் அனைவரும் அன்புடன் கரம் பற்றி இழுத்ததால், சரி என தயக்கத்துடன் முன் வந்த தோழர் அண்ணாத்துரைக்குக் கிடைத்த அன்புரைகள்!!

சொரணை கெட்ட ஜென்மங்கள் கூடத் தாங்கிக் கொள்ள மறுக்கும் கடுமொழிகளே வீசப்பட்டன — எந்த மனிதனையும் வெறியனாக்கி விடக்கூடிய வசவுகள்.

தமிழ்நாட்டு அரசியலிலே மட்டுமல்ல, வேறு எந்த நாட்டு அரசியலிலேயும் — அரசியல் துறையிலே மட்டுமல்ல, எந்தத் துறையிலேயும், கருத்து மாறுபாடு காரணமாகப் பிரிந்தவர்களை, இவ்விதமான இழிமொழி மூலம் தாக்கினவர்கள் கிடையாது. ஆனால், இவ்வளவுடன் விடவில்லை, எதிர்ப்பு வீசியோர்!

வரலாறு தீட்டினர் — ஆரூடம் கூறினர் எப்படித்தான் இப்படிப்பட்ட துரோகிகளைச் சகித்துக் கொண்டிருக்கிறீர்கள், அன்பர்களே! தோழர்களே! என்று தீட்டி எதிர்ப்பு முனைகளை அமைத்தனர்.

அவ்வளவுடன் விடவில்லை! கொலை செய்யவும் பின் வாங்காத கொடியவர்கள் இந்தத் துரோகக் கூட்டத்தார், என்று கூறினர்.

காட்டு முறையில் கைதேர்ந்த பண்ணை முதலாளியிடம் உழைத்து உருக்குலையும் உழவன் கேட்டிருக்க மாட்டான், இவ்வளவு இழிமொழிகளை—பழிச் சொற்களை, விஷ வார்த்தைகளை! இவைகளை வீசினர் — விட்டு விட்டு அல்ல— தொடர்ச்சியாக — இங்கோர் நாள் அங்கோர் நாள் என்றுகூட அல்ல, எங்கும், ஒவ்வொரு நாளும்! தமிழகத்திலே, வேறு எந்தத் தனி மனிதனுக்கும், இவ்வளவு 'அர்ச்சனை' நடந்திராது என்று கூறலாம். இந்த வசை மொழிகளில் ஏதேனும் ஒன்றிரண்டே போதும், யாரையும், நமக்கென்ன, ஏன் வீணை தொல்லை, எதற்காக வசலைக் கேட்கவேண்டும் என்று சலிப்புடன் கூறிவிட்டு பொதுவாழ்க்கையில் இருந்து 'சன்யாசம்' வாங்கிக் கொண்டிருந்திருப்பர். எண்ணற்ற இளைஞர்களும், இயக்கத்தின் நெருக்கடியான கட்டங்களில் கை கொடுத்துதவிய கண்ணியவான்களும், ஏராளமாகத் திரண்டதாலும், வளர்ந்ததாலும்தான், இவ்வளவு 'இடி'களையும், தாங்கிக் கொள்ளமுடிந்தது—இவ்வளவு இழிசொல்லும் இதயத்தைத் தகிக்க முடியாமல் போயிற்று! கடுமொழி கேட்டுக் கண்ணீர் தளும்பிற்று— எனினும் கலங்காதே நண்பனே! என்று கூறி, ஆயிரமாயிரம் இளைஞர்கள் சூழ நின்று ஆர்வம் தந்ததால், புன்னகையும் மலர்ந்தது.

இழிமொழி, அண்ணாத்துரைக்கு மட்டுமல்ல — உடன் சேர்ந்தவர் அனைவருக்கும், சரமாரியாக, வேக வேகமாக! கடுமொழிக்கு மேல் கடுமொழி! மனப்புண் ஆறுவதற்குள் மற்றோர் தாக்குதல்! இதயத்திலே பாய்ச்சியபடி இருந்தனர், ஏசல் ஈட்டிகளை—கொட்டிய குருதியைத் துடைக்கக்கூட அவகாசம் அளிக்கவில்லை. இதோ வாங்கிக்கொள்— இன்னமும் வாங்கிக்கொள்—மேலும் தருகிறேன் பெற்றுக்கொள்—சுடச்சுட! சுரீல் சுரீலென்று!! என்று சொல்லிச் சொல்லிச் கசையடி தருவது போல இருந்தது வசவு வீச்சு! இவ்வளவையும் தாங்கிக் கொண்டனர், தி. மு. கழகத்தினர்! இனி யாரும் எந்தக் காரணம் கொண்டும், இவைகளைவிடக் கடுமையான 'வசவு' வீசமுடியாது, பழிசுமத்த முடியாது — இரண்டாம் பதிப்பு, மூன்றும் பதிப்பு, மலிவுப்பதிப்பு, என்ற முறையிலே, வசை புராணத்தை மீண்டும் மீண்டும் ஆசை தோன்றும்போதெல்லாம், வெளியிடலாமேயொழிய, புதிதாக, கேட்டவுடன் நெஞ்சம் திடுக்கிடக் கூடியதாக, வேறுயாரும், எந்த வசவும் வீசுவதற்கில்லை, பழிசுமத்துவதற்குமில்லை, அவ்வளவு 'சம்பூரணமாக' நடந்தேறிவிட்டது, வசவு!! தாங்கிக் கொண்டனர், திராவிட முன்னேற்றக் கழகத்தினர்—தமிழகத்திலே மட்டுமல்ல, எங்கும் இதைப்போலக் கண்டிருக்க முடியாது. தாங்கிக்கொண்டனர்—காரணம் என்ன—அந்த 'வசவுகள்' அவ்வளவும் சேர்ந்து தி. மு. க. வின் வளர்ச்சியைக் கெடுக்கவோ, அதன் அமைப்பாளர்களின், ஆதரவாளர்களின் மன உறுதியைக் குலைக்கவோ முடியவில்லை. பழி, பலத்தைத் தேடிக் கொடுத்தது. இழி சொல், நம் இதயங்களிலே புதிய வலிவை ஊட்டிற்று! நாம் காக்கப்பட்டோம், வளர்ந்தோம்! எண்ணற்ற இளைஞர்கள் தந்த கண்ணீர் காணிக்கை வீண்போகவில்லை— வளர்ந்தோம், வளருகிறோம், விரோதத்தை வளர்த்துக் கொள்ளவில்லை, சுழலும் சுறுவும் தாக்கிக் கொண்டிருப்பினும், பாதை அறிந்து கலம் விடுவோன் போல, பழி, இழிவு, வசவு எனும் சூழ் நிலைக்கு இடையிலேயே, தி. மு. கழகத்தைத் துவக்கினோம், இரண்டாண்டுகளுக்குப் பிறகு, எண்ணிப் பார்க்கும் போது, நம்மையுமறியாமல், மனம் துள்ளி விளையாடுகிறது—கழகம், கண்ணியமான முறையிலே தழைத்திருக்கக் காண்கிறோம்.

தி. மு. கழகத் துவக்கத்தின் போது, நமது தோழர்களின் ஒவ்வொரு சொல்லும் திரித்துக் கூறப்பட்டது, ஒவ்வொரு செயலுக்கும், ஒரு இழிவான நோக்கம் இருப்பதாக எடுத்துக் காட்டப்பட்டது. ஒன்றாக இருந்தகாலை, மலராகக் கருதப்பட்ட சொல்லும் செயலும், பிரிந்தோம் என்ற ஒரே காரணத்துக்காக, மலத்தினும் கேவலமானதாகப் பொது மக்களிடம் கூறிவிடப்பட்டன. தமிழ் நடையின் மாண்புக்கு ஓர் எடுத்துக் காட்டு— என்றனர்—பிரியா முன்பு! பிரிந்தோம், சுவைதரு மொழியில் பேசியும் எழுதியும் வரும் சூதுக்காரர் என்று தூற்றப்பட்டோம்.

சிறுகதை உலகிலே பெரியதோர் மாறுதல், என்று சிறப்புரை தந்தனர், குடும்பம் ஒன்றாக இருந்த போது—வெளியேறினோம், கதை எழுதும் கயவன், என்று கண்டிக்கப்பட்டோம், நாடு திருந்த நாடகமாடுகிறார்கள் என் நல்ல பிள்ளைகள் என்ற பாராட்டுதல், பிரியா முன்பு —பிரிந்தோம், கூத்தாடும் கூட்டம் சேர்த்து வயிறு கழுவும் வக்கற்றதுகள், என்று 'விருது' தரப்பட்டது. புயலெனச் சுற்றித் தென்றலெனப் பேசிவருகிறார்கள் என்ரத்தினங்கள்

(5-ம் பக்கம் பார்க்க)

தி. மு. க. மாநில் மாநாடு அன்பழைப்பு

வைதீக வல்லரசை
மத மயக்கத்தை
ஜாதிபேத வெறியை
சுரண்டல் பிழைப்பை
காங்கிரஸ் கபடத்தை

அச்சம், தயை, தாட்சணியமின்றி தாக்கித் தகர்த்துவரும் புரட்சி இயக்கம், **திராவிட முன்னேற்றக் கழகம்.**

*

வரலாற்றுத் தெளிவுரை
பகுத்தறிவு விளக்கம்
பொருளாதார நுணுக்கம்
தமிழாராய்ச்சி ஆர்வம்

ததும்பும் சொற்பொழிவுகள், பாடல்கள், ஏடுகள், நாடகங்கள் மூலம் நாட்டிலே புதியதோர் எழுச்சி பூத்திடச் செய்தது திராவிட முன்னேற்றக் கழகம்.

*

வேங்கைக் காட்டிலே நரியாட்சியா? வீரர் கோட்டத்தில் வீணர் ஆதிக்கமா? என்று அஞ்சாது கேட்பது திராவிட முன்னேற்றக் கழகம்.

*

பதவி மோகத்தை விலக்கி, பண மூட்டைகளை வெறுத்து பாட்டாளியின் விடுதலைக்குப் பாடுபடுவது திராவிட முன்னேற்றக் கழகம்.

*

கலையிலே புதுமணம் கமழப்பாடுபடுவது திராவிட முன்னேற்றக்கழகம்.

*

தேர்தல் புயலின்போதும் தெளிவுரை தருவது திராவிட முன்னேற்றக் கழகம்.

*

இளைஞர்களின் இணையில்லாப் பாசறை திராவிட முன்னேற்றக்கழகம்.

*

சென்னை S. I. A. A. திடலில் டிசம்பர் **13, 14, 15, 16,** நான்கு நாட்கள் திராவிட முன்னேற்றக் கழக **மாநில மாநாடு** நடைபெறும்!

நாடு நலம்பெற விழைவோரே! திரண்டு வருவீர், சென்னைக்கு!! வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும் வீரர்காள்! வாரீர், சென்னைக்கு! வழங்குவீர் ஆதரவு!

*

வாள் பலத்தால் வாழ்ந்தனர் நம் மூதாதையர்.

வஞ்சகர் தாள் பணிந்து தாழ்ந்தனர் இடைக்காலத்தவர்.

அறிவாயுதம் கொண்டு போரிடுகிறோம் இன்று நாம்!!

புதிய பொலிவு! புதிய வலிவு!! மாசு துடைக்கப்பட்டமணி, அரைத்தெடுத்த சந்தனம், புடம் போட்டு எடுத்த தங்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.

கொள்கைக்காக எதையுந் தாங்கும் இதயம் கொண்ட இளைஞர் ஏறுகள் ஆயிரமாயிரமாகக் கூடுகின்றனர் சென்னை S. I. A. A. திடலில் டிசம்பர், **13, 14, 15, 16.**

மாநில மாநாடு கண்டு களித்துப் பயனடைய வாரீர்!

கருத்துரை வழங்க வாரீர்!
தாயகப் பணிபுரிவோம் வாரீர்!
கலை ஆர்வம் காண வாரீர்!
கடமை மறவாது வாரீர்!

நாடெங்கும் பரவியுள்ள தி. மு. க. ஆதரவாளர்களே திரண்டுவாரீர் சென்னைக்கு!

ஓட்டு! ஓட்டு! ஓட்டு!!
எனக்கு!
ஐயோ, எனக்கு!!
இல்லை! எனக்கு!!!

நாடெங்கும் இதேபேச்சு காதைக் குடைகிறது.

நாலாண்டுகளுக்கு மேலாக நாட்டில் நாசம் விளைவித்த காங்கிரசாட்சி நாடிதளர்ந்து, ஈளைகட்டி மரணப் படுக்கையில் கிடக்கிறது!

நாடு அறியும் வண்ணம் நல்லோர் உணரும் வண்ணம் இளைஞர் சீறி எழுகிற வண்ணம் காங்கிரசாட்சியின் கொடுமைகளை எடுத்துரைத்து பாசீசத்தை எதிர்த்து அறப்போர் நடாத்தியது திராவிட முன்னேற்றக் கழகம்.

*

தேர்தல் நெருங்கிவிட்டது காங்கிரசுக்கு என்ன கதி என்பதைக் காட்டவேண்டும்.

S. I. A. A. திடலில் வெள்ளம் போல் வீரர் கூட்டம்!

வெறியாட்சி நடாத்தியவர்கள் விரண்டு ஓட்டும்!! டிசம்பர் 13, 14, 15, 16 நினைவிருக்கட்டும்.

எந்த வேலையையும் ஒதுக்கி வைத்துவிட்டு இந்தப் பாசறை வந்து சேருங்கள்.

எத்தரின் ஆதிக்கத்துக்கு இறுதிச் சடங்கு செய்யுங்கள்!

ஆளவந்தாரின் கொடுமைகளுக்கு ஆளானோரே! அடக்கு முறை பொறித்திட்ட தழும்பு ஏறினோரே! சிறையில் வாடிய சிங்கங்காள்! செந்நீரும் கண்ணீரும் கொட்டிய செம்மல்களே! சேரவாரீர், பாசீச எதிர்ப்புக்கு.

தி. மு. க. மாநில மாநாடு
பாசீச எதிர்ப்புமுன்னணி!

முன்னணியில் வந்து சேருங்கள்!
வெற்றி முரசு கொட்டுங்கள்!

வாழ்க திராவிடம்! வளர்க சமதர்மம்

என் கடிதம்

காஞ்சிபுரம்,
28—11—51.

அன்புள்ள பாண்டியா,

வணக்கம். நலம். நலமா?

மடல் கண்டேன். மகிழ்ச்சி கொண்டேன்.

மாநில மாநாட்டிற்கு வருகிறேன் என்று எழுதியிருக்கிறாய். உன் வரவை ஆவலோடு எதிர்பார்க்கிறேன்.

இந்தக் கடிதம் எழுதும்பொழுது அன்னம் பக்கத்திலே இல்லை என்று எண்ணுகிறேன். ஏனெனில், நான் வருகிறேன் என்று எழுதியிருக்கிறாய். அன்னம் பக்கத்திலிருந்தால் நாங்கள் வருகிறோம் என்று திருத்தம் வந்திருக்குமே!

பாண்டியா, அவசியம் மாநில மாநாட்டிற்கு உன்னை எதிர்பார்க்கிறேன் — தனித்தல்ல! மாநாட்டு பந்தலுக்குள் நான்கு கால்கள் பதிய வேண்டும். சகோதரி அன்னத்திற்கு என் அன்பழைப்பை கூறு.

ஒரு திங்களுக்குமுன் இணைந்த காதல் புறாக்கள் நீங்கள்—அதுவும் இலட்சியவானிலே பறந்திருந்து இணைந்த ஜோடி!

ஆகவேதான் இருவரையும் அன்புடன் வரவேற்கிறேன்.

பாண்டியா, நீ தெரிவித்திருந்தது போலத்தான் பல தோழர்கள் தினமும் எழுதுகிறார்கள்.

நாம் கல்லூரியில் படித்தபொழுது, மிஸ்டர் சாப்பாடு என்று அடிக்கடி கேலி பேசுவோமே, அந்த திருஞானம் இப்பொழுது தூத்துக்குடியிலிருக்கிறானாம். அவன் எழுதியிருக்கிறான்.

நம்ம ஊர் சுந்தரம், அவன்தான் டிப்டாப் சுந்தரம் என்போமே, அவன் வருவதாக தெரிவித்துள்ளான்.

கலிங்கன் என்ற பெயரில் பாட்டு எழுதுவானே பரமன் அவன்கூட வருகிறானாம்.

கருணாகரன் இப்பொழுது பம்பாயிலிருக்கிறானாம். அவன் விமானத் தபாலில் அனுப்பியிருக்கிறான் அவன் வரும் தேதியை.

இப்படி தினமும் கடிதங்கள் வந்து குவிந்த வண்ணமுள்ளன. அவைகளைக் காணும் பொழுதெல்லாம் மகிழ்ச்சி.

அவர்கள் வருகை, எனக்குப் பெருமை, பூரிப்பு! ஏனெனில் மாநில மாநாட்டில் என் தோழர்களின் தொகை வளர்ந்துள்ளதைக் காணும்பொழுது, என்னை நானே பெருமைப்படுத்திக் கொள்ளாமல் எப்படி இருக்கமுடியும்? ஆகவேதான் அவர்களை வரவேற்கிறேன். அவர்கள் இன்னும் எத்தனைதோழர்களை அழைத்துவர முடியுமோ, அவ்வளவு தோழர்களையும் உடன் அழைத்து வரும்படிக் கேட்டிருக்கிறேன்.

மாநில மாநாட்டிற்கு தோழர்களை அழைக்கிறேன், அன்போடு, ஆர்வத்தோடு! ஆனால், தோழர்களுக்கு சில செய்திகளை நினைவுபடுத்துகிறேன், உரிமையிருக்கிறது என்கிற காரணத்தால்!

மாநில மாநாடு, சென்னை நகரில் நடைபெறுகிறது.

சென்னை நகரம், இடநெருக்கடிக்கு பெயர் பெற்றது என்பது எல்லோருக்கும் தெரியும்.

இடவசதி செய்து தரவேண்டும் என்று எழுதியிருக்கிறான் சுந்தரம். அவன் குளிக்க, இருக்க, நல்ல அறை வேண்டுமாம்! அதற்கு ஏற்பாடு செய்து தரவேண்டுமாம்!

மாநில மாநாட்டிற்கு வருபவர்கள் சுந்தரம்மட்டும் என்ற நினைப்பில் எழுதியிருக்கிறான்போலிருக்கிறது!

இரண்டு லட்ச மக்களுக்குமேல் சென்னை நோக்கி இலட்சிய யாத்திரை செய்யப் போகிறார்கள்.

அவர்கள் எல்லோரும் சென்னையில் நான்கு தினங்கள் தங்கியாக வேண்டும். தங்கத்தான் போகிறார்கள்!

சுந்தரத்திற்கு ஒருநண்பன்இருக்கிறேன் என்பதால் எழுதிவிட்டான்.

எத்தனையோ தோழர்கள் சென்னையை அப்பொழுதுதான் முதன் முதல் பார்க்கப் போகிறார்கள். அவர்கள் எல்லாம், தங்கியிராமல், தவிக்கவாபோகிறார்கள்!

பத்தாயிரம் ரூபாய் செலவு செய்து, பரந்த மைதானத்தில், மிகப்பெரிய பந்தல் போடுகிறார்களே, அது நமது மாளிகையல்லவா? மாளிகையைவிட்டு விட்டா, வேறிடந் தேடுவது!

புரட்சிக்கால் நட்டு, புதுக் கருத்து கழி பரப்பி, எழுச்சிக்கீற்றுகொண்டு, உணர்ச்சி, உற்சாக கயிறு, நாறு கொண்டு கட்டிய அந்த பந்தல் நமது அரண்மனை — மற்றது எட்டடுக்கு மாடியானாலும் கர்த்தபம் கண்மூடி வாலாட்டி நிற்கும் குட்டிச் சுவரென்றல்லவோ கருத வேண்டும்!

அப்படி அதிக வசதி வேண்டும் என்று கேட்டால், சென்னையில் எத்தனையோ ஓட்டல்கள் உண்டு. ஒய்யாரம் குறைய மனம் சகியாதவர்கள் அத்தகைய ஏற்பாடுகள் செய்துகொள்ளலாம்.

வரவேற்புக் குழுவாரும், தனியிடங்கள் பலவற்றை, வெளியூர்த் தோழர்கள் தங்குவதற்கென விடுவதற்காக முயற்சிகள் செய்து வருகின்றனர்.

ஆகவேதான் தனியிடம் வேண்டும், தங்கவசதி தேவை யென்றெல்லாம் இந்த நேரத்தில் கேட்பதில் எனக்குக் கொஞ்சம் கோபந்தான்!

முன்ஷியாரின் முகாம், மிகவும் மும்முரமாக இருக்கும் இடம் சென்னை.

ஆறவுன்ஸ் ஆர்ப்பாட்டம் கொஞ்சமும் குறையாத நகரம் அது.

அங்கு நெற்களஞ்சியம் என்று பெயர் பெற்ற தஞ்சை, நெல்லின் பெயரையே, தன் பெயராகக் கொண்ட நெல்லை, நஞ்செய் நிறைந்த நாஞ்சில், இன்னும் பல்ப்பல வளமான மாவட்டங்களைச் சேர்ந்த தோழர்கள் பலர் கூடப் போகிறார்கள்.

அவர்கள், சென்னையின் நிலையறிவார்கள்.

மாநாட்டு வரவேற்புக் குழுவினர் மாநாட்டிலேயே உணவு ஏற்பாடு செய்யவில்லை யென்பதற்குரிய காரணம் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

உணவு ஏற்பாடு செய்யக்கூடிய வசதிகள் ஏதும் சென்னையில் முயன்றாலும் முடியாது என்பதால்தான் அந்த வேலையிலீடுபடவில்லை,

வரவேற்புக்குழுவினர், அவர்களாலான மட்டிலும், மாநாட்டுக்கு அருகிலேயே, உணவு வசதி கிடைக்கச் செய்ய முயற்சி செய்கிறார்கள்.

பந்தலுக்குள்ளேயே, தனிப்பட்டோரால் நடத்தப்படும் உணவுக் கடை இருக்கும்.

மாநாட்டிற்கு மிக அண்மையிலேயே, சென்னையில் பெயர்பெற்ற உணவுச் சாலைகள் உள்ளன.

உணவுப் பிரச்சினையை மிகவும் வளர்த்துவானேன்! செவிக்குணவில்லாதபோது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும் என்ற குறளே போதுமே!

மாநாட்டு நிகழ்ச்சிகளைப் படிக்கிறபொழுதே, பசி பஞ்சாய் பறந்திடுகிறது!

அரிய சொற்பொழிவு, இனிய இசை நிகழ்ச்சிகள், உயரிய நாடகங்கள், உன்னத ஓவியக்காட்சி...அப்பப்பா, இவைகளிருக்கும் பொழுது நான்கு நாட்களுக்கென்ன, எத்தனை நாட்களுக்கு வேண்டுமானாலும் பசியைப் பொறுத்துக் கொள்ளலாமே!

என்னடா, இவன் உண்ணாவிரதமே இருக்கச் சொல்வான் போலிருக்கிறதே என்று எண்ண வேண்டாம்.

சாப்பிடாமலே இருக்கச்சொல்ல நான் தயாராக இல்லை. யாரால்தான் முடியும்?

நான்கு தினங்களுக்கும் கிடைத்த உணவுப் பொருள்களைக் கொண்டு திருப்திப்படவேண்டும்.

ரொட்டியும் பழமும் மட்டும் கொண்டே ஒரு வேளை உணவை முடித்துக்கொள்ள வேண்டியிருந்தாலும், முணுமுணுப்பின்றி, முக மலர்ச்சியோடு திருப்தியடைய வேண்டும் என்கிறேன்.

மாநில மாநாடு, உரிமைப்போர்ப் படையின் பசறையாகத்தான் திகழப் போகின்றது!

அதற்கு வருந்தோழர்கள் போர் வீரர்கள்! வருந்தோழிமார்கள் மறக்குடி மகளிர்!

நான்கு தினங்களும், அவர்களின் போர்ப் பயிற்சி நாட்கள்.

அவர்கள் வசதி தேடமாட்டார்கள்! வளைந்தவாழ்வை நிமிர்த்த வழியென்ன என்று ஆராய்வார்கள்! அதற்கான திட்டம் தீட்டுவார்கள்! தீர்மானம் நிறைவேற்றுவார்கள்!

சோறு கிடைக்கவில்லையே என்ற சோக கீதம் பாடமாட்டார்கள்! பல்லாயிரக் கணக்கில் மக்களை சோற்றுக்கின்றி வாடவிட்ட பாசிச சர்க்காரின் கையாலாகாதத் தனத்தைச் சாடுவார்கள்! இடமில்லையே என்று ஏங்க மாட்டார்கள்! இனத்தின் ஏற்றத்திற்கு, தூங்காமல், துவளாமல் நான்கு தினங்களும் வழி வகைகளை ஆராய்வார்கள்!

சுருங்கச் சொல்லி விளங்கவைக்க வேண்டுமானால், மாநில மாநாடு, கோட்டையிலே ஊற்றப்பட்ட கஞ்சி சாறல்ல! முழுக்கவும் கடித்து நாறு நீக்கிச் சாப்பிடவும் முடியாதென்றால் இனிப்பை இழக்க வேண்டியதுதான்!

இப்படி நீ கூறுவாய் என்று எனக்குத் தெரியும். உனக்காக இவைகளைச் சொல்லவில்லை. சில தோழர்கள் அப்படி எனக்கு எழுதியிருந்தார்கள். அந்த நினைவில் உன் கடிதத்தில் எழுதிவிட்டேன். மன்னித்து விடு.

எனக்கு மாநாட்டு வேலைகள் அதிகமிருப்பதால் முதலில் என்னைப் பார்த்துவிட்டு பிறகு மாநாட்டிற்கு வரலாம் என்று எண்ணி என்னைத் தேடவேண்டாம்.

மாநாட்டில் உள்ளே வருவதற்கு பல் வகை டிக்கட்டுகள் வைத்திருக்கிறார்கள். நீ அவசியம், நன்கொடையாளர் டிக்கட் பெற்றுக் கொண்டு உள்ளே வந்துவிடு. இடம் வசதியாக அமைத்திருக்கிறார்கள். உங்கள் இருவருக்கும் இருபது ரூபாயாகப் போகிறது! எவ்வளவோ செலவு செய்து சென்னை வருகிற நீ, இதில் கஞ்சத்தன காட்டாதே!

சில தோழர்கள், அவரைத் தெரியும், இவரோடு ஒட்டிக் கொண்டே போய்விடலாம், அவரே என்னை மேடைக்கு அழைத்துச் சென்று விடுவார் என்றெல்லாம் எண்ணிக் கொண்டு, மாநாட்டு நடவடிக்கைகளுக்கு பெரும் இடைஞ்சலாக இருப்பதைப் பார்த்திருக்கிறோம். அந்த மாதிரி தவறான எண்ணம் உனக்கு கிடையாதென்பதை நான் அறிவேன்.

என்னிடம் சொன்னால் இடம் முன்னே கிடைக்கும் என்று அன்னத்தினிடம் சொல்லி அழைத்து வந்து என்னை அன்னத்தின் முன்னிலையில் அவமானப்படுத்தி விடாதே! எவரும் அத்தகைய சலுகைகளை இந்த மாநாட்டில் செய்யவும் மாட்டார்கள்- எதிர்பார்க்கவும் கூடாது!

நீல நிற கால் சட்டையும், வெள்ளை மேல் சட்டையும், தலையில் கருப்பும், சிகப்பும் கலந்த குல்லாயும் அணிந்த அரும்பு மீசையினர் பலரை பந்தலுக்குள் சந்திப்பாய். அவர்கள் உங்களுக்கு வேண்டிய உதவிகள் செய்வர்.

சரி, அவசியம் டிசம்பர் 13ம் நாள் சந்திப்போம். தோழர் நடராசனுக்கு ரூ 6 மணியார்டர் செய்து, வரவேற்புக்குழு உறுப்பினர் டிக்கட் ஒன்று எனக்கு அனுப்பச் சொல்ல வேண்டும். மணியாகிவிட்டால்மணியார்டர் எடுக்கமாட்டார்களல்லவா? அதனால் நிறுத்துகிறேன்.

வணக்கம்.

அன்பன்,
நெல்லை-வில்லவன்.

தி. மு. கழக

மாளிகை திறப்பு விழா

2—12—51 மாலை 6-மணிக்கு

நாகர்கோயில் வி. எம். ஜான் அவர்கள்

தி. மு. க. மாளிகையைத் திறந்துவைப்பார்.

இடம்: 24, சூரியநாராயண செட்டித்தெரு ராயபுரம்
(பிரைட்டன் டாகீஸ் எதிரில்)

அன்பர்கள் அனைவரும் வருக.

அண்ணாதுரை.

தி. மு. க. தோழர்களே! அச்சடித்தோ, வாய்ப்பு இல்லாவிட்டால் கையால் எழுதியோ, உங்கள் வீடுகளில் கடைகளில்

மாட்டுப் பெட்டியில்
ஓட்டுப் போட மாட்டோம்

என்ற அறிவிப்பை தயாரித்துத் தொங்க விடுங்கள்!

இன்றே! உடனே!

திராவிடநாடு

காஞ்சி] 2—12—51 [ஞாயிறு

கடைசி முயற்சி

★

அழகான ரோல்ஸ்ராய்ஸ்! அதிலே அவர்!

அங்கங்கே, கதர்க்குல்லாய்க்காரர்களின் அமோக வரவேற்பு, விருந்து, வைபவம், எல்லாம் நடந்தன.

தமிழ் நாடெங்கணும் சுற்றுப்பிரயாணம் நடத்தினார் அவர்!

அப்பொழுதும் தேர்தல் நேரந்தான்! தேர்தல் நேரத்தில்தான் அவரது சுற்றுப் பயணமும் ஏற்பாடு செய்யப்பட்டது.

பண்டிதநேருதான் 1937ல் தமிழ் நாடெங்கணும்சுற்றி காங்கிரஸ் பிரசாரம் நடத்தினார்.

அதுபோலத்தான் இப்பொழுதும் அவர் அழைக்கப்பட்டு வந்திருந்தார். மீண்டும் திரும்பிச்சென்று விட்டார்.

காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் அழைக்கப்பட்டிருந்தார் – வந்தார், போனார்.

தென்னாட்டில் எந்தவித முக்கிய நேரத்திலும் வடநாட்டிலிருந்து யாரேனும் ஒரு தலைவர் அழைக்கப்படுவார். சுற்றுப்பிரயாணம் என்பர். அவர்களைக்கொண்டு காங்கிரசுக்கு செல்வாக்கு தேடுவர்.

உத்தமர் காந்தியார், பட்டேல், போன்றோர் இத்தகைய சந்தர்ப்பங்களில் பவனி வந்ததுண்டு.

மேலும், இங்கே, இவர்களுக்குள் ஏதேனும் சிறு சச்சரவு இருந்தாலும் வடநாட்டிலிருந்து யாரேனும் ஒருவரை இறக்குமதி செய்வர்.

ஆசப்அலி, சங்கரராவ்தேவ் ஆகியோர் அழைக்கப்பட்ட சம்பவங்கள் அரசியல் கண்ணோட்டம் உள்ளோருக்கு நினைவிலிருக்கும்.

வடநாட்டிலிருந்து எவர் வந்தாலும், மிரட்சிக்கண்களோடுபார்த்து பிறகு இவர்களுக்கு மதிப்பு தருவர் என்றகாலம் மாறிவிட்டது என்பதை அவர்கள் உணர்ந்தால், அதே முயற்சியில் இறங்கமாட்டார்கள்.

வட நாட்டுத் தலைவர்களை, இங்கு ஊர்வலம் விட்டு, இங்கு ஆதரவு தேடும் முறையைக் காங்கிரஸ் கையாண்டு வெற்றிகண்டிருக்கிறது, இதற்குமுன்! ஏனெனில் பண்டித நேருவின் பயணத்திற்கு பாராளும் பன்றம் புக முடிந்தது. அந்த நம்பிக்கையால் இப்பொழுதும் அவரை அழைத்து வந்து ஊர்வலம் நடத்த ஊராளப் பார்க்கிறார்கள். அதற்கு மக்கள் மனம் மயங்கிடும் நிலை போய் நெடு நாட்களாகி விட்டன.

அவர் சென்னையில் பல பொருள் சேமிப்புக் களஞ்சிய ஆண்டுவிழாவிலே கலந்துகொண்டார்.

மியூஸியத்தில், நாம் பார்க்காத, ஆனால் பார்க்க வேண்டிய பல பொருள்களை சேமித்து வைத்திருப்பதால் மக்கள் செல்கின்றனர்.

அதுபோலத்தான், வடநாட்டுத் தலைவர்களின் இறக்குமதியின் பொழுது மக்கள் கூடுவர். அதனால் பலன் இல்லை.

மியூஸியத்தில் மக்கள் பார்க்கிறார்கள், பலபொருள்களை! பண்டித நேருவையும் பார்ப்பார்கள், அது போலவே!

அதனால் பலன் உண்டா என்றால், இல்லையென்பதை, வருந் தேர்தலில் அறிந்து கொள்ளப் போகிறார்கள்! கடைசிக் காலம், கடைசி முயற்சி — செய்துபார்க்கிறார்கள்!

★

பழைய கதை—புதிய பாடம்

★

“என்ன மகா மேதாவித்தனம்! ஏண்டா சுப்பு! இதிலே என்னடா புத்தி தீட்சண்யமிருக்கு! ஒப்பந்தமாம் — ஒப்பந்தம் — எதற்கு? வாழ்க்கை ஒப்பந்தம்— பேரைப் பாரு பேரை! வாழ்க்கை ஒப்பந்தம் ஏற்படத்தான் நடக்குமோ? புருஷன் மனைவின்னு எப்பொ அவா இருவரும் அக்னி சாட்சியா ஒன்றாகி விட்டாளோ, அப்பவே, அசைக்க முடியாத ஒப்பந்தம் ஏற்பட்டுட்டாவிட்டதுன்னுதானேடா அர்த்தம். இதைப் புரிந்து கொள்ளாமப்படிக்கு வாழ்க்கை ஒப்பந்த பத்திரமாம் – அதிலே இருவரும் கையெழுத்திடுவதாம், அதைப் பகிரங்கமாகப் படிப்பதாம், வெட்கமில்லாமெ, செச்சேச்சே! என்ன செய்கையடா இது–”என்று புரோகிதம் புண்யகோடீஸ்வர ஐயர், புலம்பல் போன்ற தோரணையில் பேசினார். சுப்புவுக்குக் கோபமும் வரவில்லை, திருப்தியும் ஏற்படவில்லை. புரோகிதர், வெற்றி தனக்கு என்று தவறாக எண்ணிக்கொண்டு, புலம்பும் போக்கை மாற்றிக்கொண்டு, வீரமாகப் பேசினார்.

“டே, சுப்பு! நான் கேட்கிறதுக்குப் பதில் சொல்லுடா. ஒரு புருஷனும் பெண்ணும் நாலுபேர் முன்னாலே, விவாஹம் செய்து கொள்றான்னா, அவர் இருவரும் பிரியமாக, ஒத்துமையா, ஒருவருக்கொருவர் வாத்சல்யத்தோடு வாழ்வான்னு தானே பொருள். இதைச் சொல்லிக்கொள்ள வேணுமோ — இதுக்கு என்னத்துக்குடா ஒப்பந்தம்? அப்படி என்னடா இருக்கு அந்த ஒப்பந்தத்திலே”? என்று கேட்டார்.

சுப்பு, படித்துக் காட்டினான் ஒப்பந்தப்பத்திரத்தை. “இன்று முதல் நான் உன்னை என் வாழ்க்கைத் துணைவியாகக் கொள்கிறேன். வாழ்க்கையில் சமஉரிமை தருவதாக உறுதி கூறுகிறேன்” — இது மணமகன் கையொப்பத்துடன். இதே போல் இன்னொன்று மணமகள் கை எழுத்துடன், என்று விளக்கினான் சுப்பு.

“இதுதானே ஒப்பந்தம்—சுப்பு! புத்தியும் யுக்தியும் இருந்தா, என்னைச் சமமாக நடத்து, சமஉரிமை கொடு, அப்படி ஒரு நிபந்தனை இருந்தாத்தான் நாம் தம்பதிகளாக முடியும்னு கேட்பாளோ? கையாலாகதவா, பேசற பேச்சல்லவோ இது! புருஷனிடம் பிரியமா நடக்கிற வித்தை தெரிந்தவளில்லை இந்தப் பொண்ணுன்னு அர்த்தம். பயந்தாங்கொள்ளி: அதனாலே தான் ஒப்பந்தம் தேவைப்படறது. தைரியமும் புத்தியும் உள்ளவா, இப்படி ஒரு ஒப்பந்தம்தேவைன்னு சொல்லவே மாட்டா” என்றார்.

சுப்பு, அன்று தன் நண்பன் பல்லவன் திருமணத்துக்குச் சென்றிருந்தான். பெரியார் தலைமையில் நடைபெற்ற வாழ்க்கை ஒப்பந்தம் அது. வாழ்க்கை ஒப்பந்தம் என்ற பொருள் பற்றிய அரிய கருத்துரை கேட்டு மனமாறிய சுப்புவுக்கு, விவாஹ சுப முகூர்த்தங்கள் நடத்திப் பிழைப்பை ஓட்டும் புரோகிதரின் ‘வாதம்’ தன் ‘இலாக்கா’ மூடப்பட்டு விடுகிறதே என்ற கோபத்தின் விளைவு என்பது புரிந்துவிட்டது. நிலைமை, பாபம், அப்படி—அவர் மீது தவறு இல்லை! அவருடைய ‘தொழில்’ கெடுகிறது என்ற திகில்–என்று எண்ணினான். புரோகிதரோ, ஒப்பந்தமாம் ஒப்பந்தம்—என்று முணு முணுத்துக் கொண்டே இருந்தார். உள்ளேயிருந்து, “ஐய்யோ! அட, கட்டாலே போறவனே! ஐய்யய்யோ!” என்று அழுகுரல் கேட்கவே, புரோகிதர், “ஏண்டி கமலு! என்னடி கமலு?” என்று கேட்டுக் கொண்டே உள்ளே ஓடினார். கமலு, ஐயரின்மகள். அவளை அக்னி சாட்சியாக மணந்து கொண்டால் போதும், ஒப்பந்தமாவது மண்ணாங்கட்டியாவது என்று எண்ணி ‘விவாஹம்’ செய்துகொண்ட விசுவநாத ஐயரின், திருக்கரம், கமலாவின் கண்ணாடிக் கன்னத்திலே தழும்பைப் பொறித்துக் கொண்டிருந்தது. சுப்பு, விடு சென்றான்.

—

மாநில மாநாட்டு நிதிக்காக

கடலூர் O. T. | 4—12—51 செவ்வாய் இரவு | செல்வம் கொட்டகையில்

பொதுச்செயலாளர் அண்ணாதுரை தலைமையில்

★ வாழமுடியாதவர்கள் ★

கதை வசனம்: மு. கருணாநிதி

மு. கருணாநிதி நடிக்கிறார்

பல நடிகமணிகளும், இயக்க நண்பர்களும் பங்கு கொள்வர்

கலைவிருந்து பருக வாரீர்!

கட்டணம்: ரூ. 5, 3, 2, 1. பெண்கள் அணா 12.

முதல் விருந்து

★

திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க நாளிலிருந்து, நம் கழகக் கொள்கைகளை, தமிழகத்தில் மட்டுமின்றி பிற மொழியாருக்கும், பிறநாட்டாருக்கும் தெரிவிக்க வேண்டும் என்ற ஆவல், கழகக் காளையரிடமிருந்து வருகிறது.

ஆங்கில வெளியீடுகள் பல, கழக சார்பிலிருந்து வெளிவரவேண்டும் என அடிக்கடி வற்புறுத்தினர்.

ஆங்கில வாரவெளியீடு ஒன்று வேண்டும் என்றும், கழக வாலிபர்கள் விரும்பினர்.

ஆங்கிலத்தில் நம் கொள்கைகளும் இலட்சியங்களும் விளக்கப்பட்டலன்றி, அகில உலகத்தின் பார்வை நம்மீது படாது என்பதை நாமறியாமலில்லை.

வற்புறுத்திடும் தோழர்களுக்கு ஆர்வமிருந்து தூண்டி விடுகிறது! வற்புறுத்தலின்படி, நடத்துவிக்க வசதியில்லையே என்ற ஏக்கம் நம்மைப் பிடித்தாட்டுகிறது!

ஆங்கில மொழியில் இயக்கத்தின் குரலை எழுப்ப வேண்டியதின் அவசியத்தை உணர்ந்தது மட்டுமல்ல, அதற்காக முயற்சி தொடங்கிவிட்டோம் என்பதின் அறிகுறிதான், காஞ்சிபுரம் வான்கார்ட் பப்ளிஷிங் ஹவுஸ் மூலம் வெளிட்டுள்ள, A Plea for Understanding என்ற நூல்.

இந்நூல் எழுதியவர் நம் அருமைத் தோழர் எஸ் வேதரத்னம் எம். ஏ. அவர்கள். அவர் எழுத்துலகில் பழுத்த அநுபவம் பெற்றவர். புரிநூலாரின் சொந்த உலகம் என்றே கூறிடும் நிலை பெற்ற ஆங்கிலப் பத்திரிகை உலகில், தன்னந் தனியாய் நின்று போராடியவர். அவர் சில ஆண்டுகளுக்கு முன் நடந்த உலக சமாதான மாநாட்டின் போது அமெரிக்கா சென்றிருந்தார். அத்தகைய பெருமை வாய்ந்த ஆசிரியரின் துணையும் நமக்கு கிடைத்துள்ளது நம் முயற்சிக்கு என்பதை பூரிப்போடு கூறிக்கொள்கிறோம்.

நம் இயக்கத்தினை, வடவரும், வெளி உலகத்தவரும் அறிந்திடுவதில்லை. அறிந்தவரும் தவறாக அறிவிக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் தி. மு. கழகத்தின் உண்மையினை புரிந்து கொள்ளுமாறு, அழகான முறையில் எழுதப் பட்டுள்ளது.

தங்கத்தட்டில், ஆப்பிள் துண்டுகளை அடுக்கித் தருவது போல, அரிய கருத்துகளை உயர்ந்த ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ளது.

இது கழகக் காளையர் ஒவ்வொருவர் கரத்திலேயும் தவழ்ந்திட வேண்டிய அரிய ஏடு.

[A Plea for Understanding ஆசிரியர். எஸ். வேதரத்னம் M. A, விலை எட்டணா வெளியிட்டோர் வான்கார்ட் பப்ளிஷிங் ஹவுஸ் காஞ்சிபுரம்.]

—

காண வேண்டும்

★

“அன்புடையீர்,

வணக்கம். மதுரைத் தீர்மானம் கேட்டு மனம் பூரித்தேன். மாட்டுப் பெட்டிக் காரருக்குச் சரியான சம்மட்டி அடி என்று தீர்மானத்தைக் கருதுகிறேன்.

தாங்கள் குறிப்பிடும் ஒப்பந்தத்தில்கையெழுத்துப் போட்டுவிட்டு, தோழர்கள் ஜீவானந்தம், A. K கோபாலன், பார்த்தசாரதி, நம்பியார், மற்றுமுள்ள கம்யூனிஸ்டுத் தலைவர்களும், பொதுவாகவே ஐக்கிய முன்னணி அபேட்சகர்கள் அனைவரும், நமது மாநில மாநாட்டிலே, மக்கள் மன்றத்திலே தோன்றி, எங்களை எல்லாம் மகிழ்விக்கச் செய்வார்களா? நாங்கள் அந்தக் காட்சியைக் காணத்துடியாய்த் துடிக்கிறோம். அந்தக்காட்சி ஒன்றே போதும். காங்கிரசுக்கு மரண ஓலை தான்!”

இப்படிப்பல கடிதங்கள்!! படிக்கும் போதே இனிக்கிறது! எண்ணும் போது பூரிப்பு!!

ஆனால் என்ன பதில் கூறுவது இந்த ஆவல் கொண்ட அன்பர்களுக்கு?

அந்தக் காட்சி உண்மையாகவே நாட்டிலே புதிய ஆட்சியை ஏற்படுத்தும்.

காண்பவர், கருத்து களிப்புறும், காங்கிரஸ்காரர் அச்சத்தாலேயே தோற்பர்.

காண வேண்டும், அந்தக் காட்சியை உருவாக்க வேண்டும். பார்ப்போம்.

C. N. A.

2-ம் பக்கத் தொடர்ச்சி

மாணிக்கங்கள் என்று புகழப்பட்டோம், பொறுக்கித் தின்றதுகள் போக்கிட மத்ததுகள் என்று தாக்குதல் கிளம்பிற்று. எல்லாம், தாங்கிக் கொண்டோம், அதன் பயனாக எதையும் தாங்கும் இதயம் பெற்றோம்.

நாலு நாள் கூத்து—என்று கூறினர், பெரியதோர் அணிவகுப்பாகி விடக்கூடாது தி. மு. க., என்பதற்காக! பார்த்துக் கொண்டே இருங்கள், பயல்கள் ஓடி ஆடி அலுத்து, ஏதேனும் ஒரு கட்சியிலே தஞ்சம் புகுந்து கட்டியம் கூறிக் காலந்தள்ளப்போகிறார்கள், என்று 'ஜாதகம்' கூறினர்—தோழர்களின் இடைவிடாத முயற்சியால், தி. மு. க, சோரம் போய்விடவில்லை, வீரர் கோட்டமாகவே விளங்குகிறது.

ஆதரிக்க ஆள் யார்? அதுவும் இதுவும் கத்திவிட்டால் இயக்கமாகி விடுமா—அங்கே இங்கே கூத்தாடினால் காரியம் நடந்துவிடுமா—என்று கூறினர்—தி. மு. கழகம், தமிழகத்தில், எல்லா மாவட்டங்களிலும் சிறப்பான முறையிலே மாநாடுகள் நடாத்தி, தனிப் பிரச்சினைகளுக்கும் மாநாடுகள் நடாத்தி, இப்போது மாநில மாநாட்டைச் சென்னையில் நடத்தும் நிலைக்கு வளர்ந்திருக்கிறது.

ஒரு இயக்கத்தை நடத்திச் செல்ல, பணம் வேண்டாமா—இதுகள் பணக்காரர்களிடம் சென்று பல்லிளித்தால் கூடப் பணம் தருபவர் யார், எனவே துவக்கப் பட்ட கழகம் துவண்டு விடும் வெகு விரைவில், என்று பேசப்பட்டது. கழகம் துவண்டு போகாதது மட்டு மல்ல, புயலையும் சமாளிக்கும் நிலையைப் பெற்று வருகிறது. பணம் தேடிச் சென்று பல்லிளிக்கவில்லை, பணி புரிந்து காட்டி, பாட்டாளித் தோழர்களிடம் மடிபிச்சை எடுத்தது. பகுத்தறிவு ததும்பும் நாடகங்களை நடாத்திக் காட்டி, சீர்திருத்த வேட்கையினரிடம் செம்பொன் கேட்டது—கிடைத்தது. இன்று, வயிறு வளர்க்கவே வேறு கட்சி துவக்கியவர்கள் — என்ற வசவுக்கு ஆளான தோழர்கள், சென்னை நகரில் சுமார் நாலு மனை அளவுள்ள இடத்தில் அமைந்துள்ளதும், காணக் காட்சியாகவும். பணிமனையாக அமைந்திட வசதிநிரம்பியதும் மும்பதாயிரம் ரூபாய் விலையுள்ளதுமான, சொந்தப் பணிமனையைப் பெற்றுள்ளனர், தி. மு. கழகத்துக்கு. 'கண்ணீர்த் துளிகள்' இதோ நமதுபாசறை, நமதுஉழைப்பின் உருவமாக விளங்கும் பணிமனை, என்று பெருமையுடன்உலாவ ஒரு இடம்!! நம்மிலே பெரும்பாலானவர்களுக்கு உள்ள வீடுகள், சாமான்யமானவைகள்! ஆனால் நம் அனைவருடைய கூட்டுமுயற்சியால், பொது ஆர்வத்தால், நமது கழகத்துக்கென அமைந்துள்ள வீடு, மாளிகை போன்றது!! பழி, பலத்தைத் தந்திருக்கிறது—அது தான், பொது வாழ்வுத்துறையிலே உள்ள 'அதிசயம்'— தாங்கிக் கொள்ளும் சக்தி வேண்டும், அதே போது திருப்பித் தாக்கினால் தான் நமது நெஞ்சிலே உள்ள நமைச்சல் அடங்கும் என்ற சபலம் தலைகாட்டக் கூடாது. இந்த 'மனநிலை'யைப் பெற்றிருக்கிறோம் — பெற்றுள்ள இந்தச் செல்வத்தை மேலும் வளமுள்ளதாக்குவோம்.

உண்மையை உரைப்பதால், ஊறும் பழியும் தாக்கிவந்து தாக்குமே என்று அஞ்சுபவர்களால், பொதுவாழ்விலே வெற்றி காண முடியாது, பொதுநலப் பணியாற்ற முடியாது. அத்தகைய அச்சம் நம்மைத் தீண்டாதபடி, நம்மை நாம் பாதுகாத்துக் கொண்டோம்—இனியும் நமது பாதை, அதுவாகவே இருக்கவேண்டும். தூற்றுவோர் தூற்றட்டும்— தூபமிடுவோர் தாராளமாகச் செய்யட்டும்—எங்கோ கிடந்ததுகள் இன்று எல்லோராலும் கவனிக்கப்பட வேண்டியவர்களாகி விட்ட, விந்தை, உருவானதற்குக் காரணம், இழிமொழியும் பழிச்சொல்லும் கேட்டு இதயம் குமுறி, வழி தவறிச் செல்லாமல், 'வசவுகளை' வெறும் வாயோசை என்ற அளவிலே கொண்டு, நமது பணி, வசவுகளுக்கு மறுப்புகள் கூறுவதல்ல, திராவிடச் சமுதாயத்தின் விடுதலைக்கு வழி காண்பதாகும், என்று திடமனதுடன், கண்ணியத்துடன் நமது சக்திக்கேற்ற வண்ணம், உழைத்துக் கொண்டிருப்பது தான்! தி. மு. கழகத்தின் துவக்கத்தின் போதே, மலைமலையாகப் பழிமொழியும் இழிசொல்லும் தூத்தித் தூத்தித் தாக்கியது, ஒரு வகையிலே நன்மைக்கே தான். துவக்கத்தின் போதே, இவ்வளவும் தாங்கிக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டு விட்டதால், கழகத்துக்கு, எதிர்பார்க்கக் கூடியதை விட அளவிலும் வகையிலும் அதிக சிறப்பானதான வலிவு கிடைத்து விட்டது. இனி, பழி போட்டுத் தலை வாங்கலாம் என்று எவர் எண்ணினாலும், இழிமொழி வீசி இடுப்பை ஒடிக்கலாம் என்று எவர் நினைத்தாலும், பலன் காண முடியாது! யார், ஏவ்வளவு கேவலமாகப் பேசுவதாக எண்ணிக்கொண்டு எதைக் கூறினாலும், பதறவேண்டிய நிலையில் இல்லை, நமது முன்னாள் இருப்பிடத்தின் இன்றைய அலுவலர்கள், நமக்கு, பழி கேட்டுப் பதறா உள்ளத்தைப் பெறும், பயனுள்ள பாடத்தைப் போதித்து விட்டனர்! நாம், அந்தப் பரீட்சையில் தேறிவிட்டோம் — எனவே, இடர்கள் எது வரினும் நமக்குக் கலக்கம் ஏற்படக் காரணம் இல்லை. கரி, தன் குட்டிக்கு வீரமும் திறமும் வருவதற்காக, துதிக்கையால் குட்டியை இழுத்தும் தள்ளியும், தட்டியும் கொட்டியும் பயிற்சி தரும் என்கிறார்கள். தி. மு. கழகத்துக்கு, அத்தகைய பயிற்சியைத் தந்திருக்கிறது திராவிடர் கழகம். பயிற்சி போதவில்லையோ என்று ஒருவேளை எண்ணிக்கொண்டு மறுபடியும் பயிற்சி தர முன்வரக்கூடும். அதைத் தவறாகக் கருத வேண்டாம். பன்னெடுங்காலமாகப் பலப்பல பகைவர்களால் பாழாக்கப்பட்ட திராவிடச் சமுதாயத்திலே பணியாற்றக் கிளம்பியிருக்கிறோம்—பழிகளைத் தாங்கிக்கொள்ளும் மனப்பண்பு இந்த அறப்போருக்குத் தேவையான ஆயுதம். அந்த மனநிலையை நாம் பெறுகிறோம், 'வசவுகள்'மூலம். வாழ்க வசவாளர்கள்! வாழ்க போதகாசிரியர்கள்!! ✻

ஓவியக் கண்காட்சி

தி. மு. க. வின் அடுத்த கலைப்புரட்சி இந்த ஓவியக் காட்சி விருந்து!

இதுவரை, பேச்சால் பெரும் புரட்சி செய்கிறார்கள்! எழுத்தால ஏமாற்றுகிறார்கள்! பாட்டால் பகை வளர்க்கிறார்கள்! நாடகத்தால் வகுப்புவாதத்தை புகுத்துகிறார்கள்! சினிமாக் கலையிலும் புகுந்துவிட்டார்கள்! என்று, நாம் பகுத்தறிவு பணி செய்ய, கலைத்துறையில் ஒவ்வொரு அடி எடுத்து வைத்த பொழுதெல்லாம் கூவினார்கள்! குழப்பம்விளைக்க எவ்வளவோ முயற்சித்தார்கள்! ஒவ்வொரு துறையிலும் நாம் வெற்றி கண்டோம்!

அதுபோலவே, ஓவியக் கலையின் மூலமும், நாட்டுக்கொவ்வாத நச்சுக் கருத்துகளை, மக்கள் மனத்திலிருந்து ஓட்ட முயற்சிக்கிறோம். அதன் துவக்க விழா தான் ஓவியக் கண்காட்சி

படங்களின்மூலம் பகுத்தறிவு பரப்ப முயற்சிக்கிறோம். இதிலேயும் நாம் வெற்றியடையப் போகிறோம் என்பதை, இந்த ஓவியக் காட்சி எடுத்துக் காட்டும்.

ஓவியக் காட்சிக்கான படங்களை, சென்னையில் புகழ்வாய்ந்த ஓவியர்கள் பாலு பிரதர்ஸ், சாந்தி ஆர்ட்ஸ் இயக்க ஆர்வமும் ஓவியக்கலை யார்வமும் ஒருங்கமைந்த காஞ்சி ராமச்சந்திரன், பழநிசாமி, அரி, சண்முகம், மின்னல் ஆகிய ஓவியத் தோழர்கள், திறம்பட தயாரித்துக்கொடுத்துள்ளனர்.

ஓவியக் காட்சிக்கு மட்டும் தனிக் கட்டணம் ஓரணா.

ஒவியக் கண்காட்சிக் குழு

விளம்பரம் செய்யுங்கள்!

★

தோழர்களே. இரண்டாவது பெரிய சுவரொட்டி, அழகான வர்ணங்களால் அலங்காரமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதன் அளவு பெரியது. ஆகவேதான் குறிப்பிட்ட குறைந்த எண்ணிக்கையில்தான் கிளைகளுக்கெல்லாம் அனுப்பப்படுகின்றது.

ஊர்களின் முக்கிய இடங்களில், மக்கள் அதிகம் சேரும் இடங்களில் எல்லோருடைய பார்வையிலும் படும்படியாக ஒட்டி வையுங்கள்.

அந்த விளம்பரந்தான் ஆயிரந் தினசரிகளின் விளம்பரத்தைவிட அதிக பலன் தரும் எனபதை மறவாதீர்கள்! ஆகவே தக்க முறையில் சுவரொட்டிகளைப் பயன் படுத்துங்கள்! விளம்பரத்தை விரிவாக்குங்கள்!

அடுத்த மிகப் பெரிய சுவரொட்டி, இன்னும் சில தினங்களில் அனுப்பப்படும. ஒவ்வொரு கிளைக் கழக முகப்பிலும், பொதுக் கூட்டங்களிலும் ஒட்டி வையுங்கள்! மாநாட்டு செய்தியை பரப்புங்கள்!

சுவரொட்டிகளைத் தொடர்ந்து, துண்டு வெளியீடுகள் வேறு அனுப்பப்படும். ஊரிலுள்ளோர் அனைவர் கரங்களிலும், அது தவழச் செய்யுங்கள்! மாநாட்டின் நிகழ்ச்சியை நினைவு படுத்துங்கள்!!

புத்தகக் கண்காட்சி

இரண்டாண்டு காலத்தில், நம் இயக்க சார்புள்ள நூல்கள் நூற்றுக்கணக்கில் வெளியாகியுள்ளன. நம் இயக்க பேச்சாளர்களின் பேனாமுனை தீட்டிய ஏடுகள் ஏராளம். முன்னணி வீரர்கள் பேசிய பேச்சுக்கள் பல ஏடுருவாக்கப்பட்டுள்ளன. இயக்கத்தோழர்களே வெளியீட்டகங்கள், நூல்பண்ணைகள் நடத்துகிறார்கள். அவர்கள் ஓவியக் கண்காட்சியிலேயே, ஒரு பகுதியான புத்தகக் கண்காட்சிக்கென இரண்டிரண்டு நூல்கள் அனுப்பக்கேட்டிருக்தோம். சிலர் அனுப்பியுள்ளனர். இன்னும் அனுப்பாத நூல்பண்ணைகள், 5—12—51க்குள், நூல்களை அனுப்பிவைக்க வேண்டுகிறோம். தனிப்பட்ட தோழர்கள், வெளியிட்டிருந்தாலும் அவர்களும் காஞ்சிபுர முகவரிக்கு அனுப்பி வைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

தொண்டர் படையினருக்கு

தொண்டர் படையினரின் ஒத்துழைப்பிலும், ஊக்கத்திலுந்தான் மாநாட்டின் வெற்றி மறைந்திருக்கிறது!

தொண்டர் படையினரே, மாநாட்டினை நன்முறையில் நடத்திவைக்கப் போகும் வீரர்கள்.

அவர்கள், தங்கள் கடமையறிந்து பணியாற்ற வேண்டும். இலட்சக்கணக்கில் மக்கள் வருவார்கள். அவர்கள், தொண்டர்களின் துணை உண்டு என்ற திட நம்பிக்கையில் வருவார்கள். அவர்களுக்கு துணையாக இருக்க வேண்டும்.

சென்னைக்கு வரும் தோழர்கள் பலருக்கு சென்னை புதிய நகரமாக இருக்கலாம். அவர்களுக்கு வழிகாட்டியா யிருக்கவேண்டும்.

தொண்டர்களுக்கு துவளும் மனப்பான்மை கூடாது. சோர்வும், சலிப்பும் இருத்தல் ஆகாது.

தொண்டர்களுக்கு கோபம் கூடவே கூடாது. பொறுமை வேண்டும். அடக்கம் வேண்டும்.

தொண்டர்கள் இன்முகம் காட்டி, வருவோரின் தேவைகளை யுணர்ந்து பணியாற்றவேண்டும்.

தொண்டர்கள் இருநூறு பேர்கள்—அவர்களை நம்பி எத்தனை இலட்சம் மக்கள்! இதனை மனதில் நிறுத்தி பணியாற்ற வேண்டுப்.

கே. எம். கண்ணபிரான்,
வி. என். மார்க்கு;
தொ. ப. தலைவர்கள்.

தி. மு. க. மாநில மாநாட்டு பிரதிநிதிகள்

திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டுக்கு ஒவ்வொருகிளைக் கழகமும் செயலாளரையும் ஒரு உறுப்பினரையும் பிரதிநிதியாக அனுப்பிவைக்கக் கோருகிறோம்.

இவர்களுடன், ஒவ்வொரு மாவட்டச் செயற்குழு உறுப்பினர்களும், மாநில பொதுக்குழு உறுப்பினர்களும், மாநாட்டுப் பிரதிநிதிகளாகக் கொள்ளப் படுவர்.

மாநில மாநாட்டுக்குப் பிரதிநிதிகளாக வர இருக்கும் தோழர்கள், முன் கூட்டியே, மாநில மாநாட்டு வரவேற்புத் தலைவர் தோழர் N. V. நடராசன் 24, சூரிய நாராயண செட்டி தெரு, இராயபுரம் என்ற முகவரிக்குத் தெரிவிக்கக் கோருகிறோம்.

பிரதிநிதிகள், அந்தந்த கிளைக் கழகத்திலிருந்து, அங்கோரச் சீட்டுடன் வரவேண்டுகிறோம்.

மாநில மாநாடு முதல் நாள், டிசம்பர் 13ல், பிரதிநிதிகள் கூடி தீர்மானங்கள் குறித்தும் ஆக்க வேலை பற்றியும் கலந்து பேச ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் வரவேற்புக் குழுவினராவர்.

பிரதிநிதிகளும், வரவேற்புக் கழக உறுப்பினர்களும் அவர்களுக்கென வகுத்துள்ள, உரிய கட்டணத்தை, வரவேற்புக் குழு தலைவருக்கு M.O. அனுப்பி உரிமைச் சீட்டுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

மாநாட்டுக் கொட்டகையிலேயும் மேற்படி சீட்டுகள் கிடைக்கும்.

திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாடு

சென்னை S. I. A. A. திடலில்

டிசம்பர் 13, 14, 15, 16

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு

ஆகிய நான்கு நாட்களில்.

தலைவர்:

அண்ணாதுரை

திறப்பாளர்:

கே. கே. நீலமேகம்

ஓவியக் கண்காட்சி திறப்பாளர்:

சி. பி. சிற்றரசு

வரவேற்புக் குழு தலைவர்:

என். வி. நடராசன்

★

மணிமொழியார்
கே. மனோகரன்
செயலாளர்கள்.

★

என். சாம்பு
பொருளாளர்.

★

கே. எம். கண்ணபிரான்
வி. என். மார்க்கு
தொ. ப. தலைவர்கள்.

★

மு. கருணாநிதி
டி. எம். பார்த்தசாரதி
கலைக் குழு.

★

சி. வி. ராசன்
ஏ. கே. சாமி
ஆர். டி. அரசு
கிருஷ்ணன்
பந்தல் அமைப்புக் குழு.

★

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.
ஈ. வே. கி. சம்பத்
மதியழகன், பி.ஏ.
வி. கே. ஜான்
பராங்குசம்
தீர்மான ஆய்வுக் குழு.

★

கே. ஏ. மதியழகன், பி. ஏ.
சௌரிராசன்
தில்லை-வில்லாளன்
ஓவியக் கண்காட்சிக் குழு.

★

மாநாட்டில்

நடிப்புப் புலவர்
கே. ஆர். ராமசாமியும்
அவரது குழுவினரும் நடிக்கும்
சந்திரோதயம்
ஜமீன் மாளிகை

மு. கருணாநிதி,
குணசித்திர நடிகர் எம். ஜி. சக்கரபாணி
மற்றும் பல சினிமாத்துறை கலைஞர்களும்
இயக்க வீரர்களும் நடிக்கும்
இளைஞன் குரல்

தெலுங்கு நாடகம்
குலமிலேனிபில்லா

தி. பெ. மு. கழகத் தோழிமார்களே
எல்லா வேடங்களும் தாங்கி நடிக்கும்
போராட்டம்

ஆகிய நாடகங்கள்.

தமிழிசை வல்லுநர்
சி. எஸ். செயராமன்
டி. வி. நமசிவாயம்
நாகூர் அனீபா,
கே. ஆர். செல்லமுத்து
இசைச்செல்வி
கஸ்தூரிபாய்
மற்றும் பலர் கலந்துகொள்ளும்
கலை விருந்து

அறிவுப் பிரச்சாரத்திற்கு
இயக்கம் தேர்ந்தெடுத்துள்ள
அடுத்த முயற்சியாகிய
ஓவியக் கண்காட்சி

நன்கொடையாளர்	ரூ. 10.	பார்வையாளர் (நான்கு நாட்களுக்கும்)	ரூ. 3
வரவேற்பாளர்	ரூ. 6.	பார்வையாளர் (தினசரி)	ரூ. 1
பிரதிநிதி	ரூ. 5.	பெண்கள் (தினசரி)	அணா 8

ஓவியக் கண்காட்சிக்கு கட்டணம் ஓரணா.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.